RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2129

# தமிழ் இலக்கியங்கள் புலப்படுத்தும் வாழ்வியலும் நிகழ்காலப் பண்பாடு மாற்றங்களும்

பி. சிவராமலெட்சுமி [அ, *], மு. புஷ்பகவல்லி [அ]

[அ] தமிழாய்வு மையம், ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), தூத்துக்குடி-628002, தமிழ்நாடு, இந்தியா.

# Language and Life in Kanmani Gunasekaran's Short Stories

**P. Sivaramalakshmi [a, *], M. Pushpagavalli [a]**

[a] Research Department of Tamil, A.P.C. Mahalakshmi College for Women, (Affiliated to Manonmaniam Sundaranar University), Thoothukudi-628002, Tamil Nadu, India

* Corresponding Author: psivaramalakshmi@gmail.com

Received: 09-09-2022
Revised: 27-09-2022
Accepted: 10-10-2022
Published: 15-11-2022

Check for updates

## ABSTRACT

"Language" is not only a tool to express human ideas and thoughts but it also helps us to reveal the lifestyle of the people. Man reflects his life through language. In the same way, the language used by the people around Villupuram, Cuddalore, Virudhachalam, and Perambalur, proclaims the lifestyle of the people to the world through their language. Kanmani Gunasekaran has moved the direction of his short story by focusing on those people. It is possible to know how these people use each word, proverbs and idioms in their life, how the meaning of those words and expressions is suitable in their life, about the things they use in their daily life and the situations faced by those people. Kanmani Gunasekaran in his short stories explained about the woman, who even after losing her husband doesn't expect help from others and put forth all her effort to led her life, various practical life ideas such as the way of living by considering other people's suffering as one's own suffering, prejudice can hurt relationships, the state of using existing space according to our convenience and women can show their unwillingness openly. Overall, this article aims to explore all these things.

**Keywords:** Relationship, Lifestyle, Kanmani Gunasekaran, Expression

## முன்னுரை

நடுநாட்டு மக்கள், ஆசிரியரின் கதை மாந்தர்கள். அவர்கள் வாழும் வட்டாரமே, அவர்களின் சிறுகதைக்கான கதைக்களமாகும். அம்மக்கள் பேசும் மொழியான வட்டார மொழியை ஆசிரியர் தன் சிறுகதைகளில் பயன்படுத்திய முறையில், மொழி ஆளுமையாக அமைந்துள்ளது. சிறுகதையில் கதை மாந்தர்கள் பயன்படுத்தும் மொழியானது அவர்களின் கருத்தை வெளிப்படுத்தும் கருவியாக மட்டும் அமையாமல் அவர்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவும் மக்களின் பண்பாட்டை வெளிக்காட்டப் பயன்படும் கருவியாகவும் உயிரோட்டமுள்ளதாகவும் அமைகிறது. நடுநாட்டு மக்களுக்கே உரித்தான மொழிப்பயன்பாடு அவ்வட்டார மக்களை தமிழ்நாட்டின் பிற பகுதி மக்களிடம் இருந்து தனித்துவப்படுத்தி அடையாளம் காணச் செய்கிறது. கண்மணி குணசேகரன் தன் சிறுகதைகளில் நடுநாட்டு மக்களின் பேச்சு வழக்கு மொழிகள் மற்றும் பழமொழிகளைப் பயன்படுத்தியுள்ளார் என்பது ஆராயப்படுகிறது.

## நடுநாட்டு வட்டாரச் சொற்கள்

நடுநாட்டு மக்கள் பேசும் வட்டார மொழியைக் கல்லில் பதித்த எழுத்துப் போல் என்றும் அழியாமல் இவ்வுலகினில் தடம் பதிக்க வேண்டும் என்பதை மையமாகக் கொண்டு ஆசிரியர் தன் சிறுகதைகளை அமைத்துள்ளார். ஒவ்வொரு சொற்களும் அதன் பொருளுடன், நடுநாட்டு வட்டார மக்களின் பண்பாட்டையும் வாழ்க்கை முறையையும் பறைசாற்றும் வகையில், செம்மையான மொழி ஆளுமையைக் கையில் எடுத்துள்ளார் ஆசிரியர்.

## தப்புக்கொட்டை

பொருள்: அறுவடை முடிந்தபின் முந்திரிச்சருகில் மறைந்தும், மரத்தில் பறிபடாமல் நிற்பதுமான முந்திரிக்கொட்டைகள் (Kanmani Gunasekaran, 2007).

'வனாந்திரம்' எனும் சிறுகதையில் கெங்காசலம் இறந்த பிறகு அவன் மனைவி தப்புக் கொட்டை பொறுக்கி தன் மகனை வளர்த்து வருகிறாள்.

"கொட்டை பொறுக்குகிற காலங்களில், ஊரை ஒட்டிய வேலியைச் சீர்படுத்தி பின்னம் நாலு தோப்பு முள்ளை அள்ளிவந்து சந்துக்குச்சந்து வைத்து கோழிகள் கூட நுழையாதவாறு வைத்து விடுவார்கள். மெனக்கிட்டு நடந்து ரோட்டுப் பக்கம் காட்டாமணி மறைப்பிற்குப் போவார்கள். காடுவிட்டு, தப்புக்கொட்டை ஆரம்பித்து விட்டால் வேலிகள் எல்லாம் பறந்து விடும்" (Kanmani Gunasekaran, 2004).

கெங்காசலம் உயிருடன் இருந்த காலத்தில், "அவனை மாதிரி யாரும் தப்புக்கொட்டை பொறுக்க முடியாது, இவள் மரத்தில் அண்ணாந்து பார்த்துக் கொண்டு கிடப்பதற்குள் இவன் ஒரு முந்திரியில் நுழைந்து பரபரவென்று சருகுகளை அடித்து ஒரு மடிக்குக் கொட்டை பொறுக்கி விடுவான்" (Kanmani Gunasekaran, 2007).

"மாசி, பங்குனி, சித்திரை வரை முந்திரிக்கொட்டை பொறுக்க கூலிக்குப் போவாள். வைகாசி, ஆனி, ஆடி வரை தப்புக்கொட்டை முந்திரிக்காய் என சீவனும் போக்குவாள். மீதி ஆறு மாதம் களைவெட்டு, அறுப்பு என பொழுதை தள்ளுவாள் நாலு பேர் பார்த்து 'ச்சீய்' என்று சொல்லாமல் ஓட்டி ராஜீவ் காந்தி இப்போது கொட்டாரக்குப்பம் பள்ளிக்கூடத்தில் நாலாவது படித்துக் கொண்டிருக்கிறான்" (Kanmani Gunasekaran, 2007). என்று கூறுவதிலிருந்து தப்புக்கொட்டை என்ற சொல் மக்களின் தொழில்சார்ந்த வாழ்வாதாரத்தையும் அப்பகுதி மக்கள் முந்திரி மரங்கள் வளர்ப்பதையும் அதிலிருந்து கொட்டை, பழம், மரம் போன்றவற்றைச்சார்ந்து வாழ்வதை அறிய முடிகிறது.

## கல்லாங்குழி

பொருள்: பின் மண்டைக்கும் கீழாக, கழுத்துக்கும் சற்று நேராக லேசான பள்ளத்துடன் இருக்கும் முடி உள்ள பாகம். இந்த முடியைப் பிடித்து இழுத்தால் வலிக்கும் (Kanmani Gunasekaran, 2004). 'இரும்பு ராசி' என்னும் சிறுகதையில் பழைய இரும்பு விற்கும் கதிர்வேலிடம் நடேச படையாட்சியின் மனைவி புதியதாக உள்ள டிராக்டரின் முன்அச்சை பழைய இரும்புக்குப் போடுவதற்காகக் கொண்டு வந்தாள். அதை அறிந்த கதிர்வேல் அதை வாங்க மறுத்து விட்டான். இதைப் பத்திரமாக உள்ளே வையுங்கள் என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டான். அப்போது வந்த நடேச படையாட்சி அதை அறிந்து கதிர்வேலை அழைக்கிறார். சத்தமாகக் கூப்பிடுகிறார்.

"'டேய் பழைய இரும்பு', கல்லை விட்டு எரிகிற குரலில் கல்லாங்குழி மயிரைப் பிடித்து இழுத்த மாதிரி நின்று திரும்பிக் கொண்டு வந்தான். இதுதான் செய்தியாக இருக்கும் என்று எண்ணியவாறு" (Kanmani Gunasekaran, 2009).

'பால் நரம்பு' எனும் சிறுகதையில் சூழ்நிலை காரணமாகச் சோலைச்சியின் மனநிலை, பாதிக்கப்பட்டு இருந்தது அவளுடன் எப்பொழுதும் அவள் வளர்த்த நாய் அருகிலேயே இருக்கும் அது அவளை மற்றவர்களிடமிருந்து பாதுகாக்கும்.

“ஒரு நாள் கோவில் முன்பு எதையோ அவள் வாய்க்கு வந்ததைப் பேசிக்கொண்டு நின்றவளின் பின்னுக்கு வாட்டமாய் வந்து வெடுக்கென்று மயிரைப் பிடித்து இழுத்து விட்டான் பெரியவன் மகன். வலியில் அவள் ‘ஆழ் ஊழ்’ என்று கத்துவதை வேடிக்கை பார்ப்பதில் சந்தோசம். கல்லாங்குழி மயிர் இழுபட்டதுந்தான் சோலைச்சி வலியில் கத்திக்கொண்டு அவனை அடிக்க ஓடினாள், அவன் அங்காண்டையும் இங்காண்டையும் போக்குக் காட்டியபடி ஓடினான். அவளால் ஓட முடியவில்லை”.

கல்லாங்குழி என்ற சொல் பிடரி என்பதைக் குறிக்கிறது (Kanmani Gunasekaran, 2010). அதில் முளைத்திருக்கும் ரோமம், பிடித்து இழுத்தால் வலிக்கும். கோபத்தைத் தூண்டும். அது மட்டுமின்றி மற்றவர்களைத் தாக்கவும் முற்படுவர் என்பதை எடுத்துரைக்கிறது.

## எறவாணம்

பொருள்: தாழ்வான உள்கூரை ‘சுருக்கு’ எனும் சிறுகதையில் முத்துலெட்சுமியின் கணவன் அவள் மீது கொண்டிருந்த சந்தேக எண்ணத்துடன் “வூட்டுக்கு வந்த உடனிய மயிர்ப் புடிச்சு வைச்சான் முதுவுல. இழுத்து கால்ல போட்டுக்கிட்டு சுத்தும் முத்தும் பார்க்கறான். புழுவாத் துடிக்கிறா. கைகெட்டன தூரத்தல எறவானத்துல மத்துக்கழி எடுத்து வைச்சான். மண்டையில ரத்தம் தெறிச்சிது அப்புறமாதான் வுட்டான்” (Kanmani Gunasekaran, 2015). ‘சுத்தம்’ எனும் சிறுகதையில் பூவாயி காலையில் எழுந்து தன் வீட்டு முன் வாசலைப் பெருக்குவதற்காக, “பொடவய அவுத்து நெல்லாக் கட்டிக்கிட்டு பாயச் சுருட்டி எறவாணத்துக் கழியில வச்சிட்டு, பெருக்கறதற்கு வெளக்கமாத்தத் தேடனா” (Kanmani Gunasekaran, 2015).

‘சுத்தம்’ எனும் சிறுகதையில் பூந்துடப்பம் தயார் செய்த பூவாயி அதைக் கட்டுவதற்குக் கயிறு தேடியவள் “பட்டுனு எறவாணத்துல தொங்கிக்கிட்டிருந்த ஒரு கந்தப் பாவாடைய எடுத்தா, பாவாடையில நாடா மட்டுந்தான் உறுதியா இருந்துது. பாவாடைய ரெண்டாக் கிழிச்சு விரிச்சிப் பாத்தா. நார் நாரா தொங்குது தோரணம் மாதிரி. நாடாவ மட்டும் கிழிச்சு எடுத்துத் திட்டமா அறுத்துத் தொடப்பத்த, கட்னப்பறம் பார்க்கப் பார்க்க ஆசியா இருந்துது” (Kanmani Gunasekaran, 2015).

‘அம்போகம்’ எனும் சிறுகதையில் காசிலிங்கமும் அவனது மனைவியும் பிரிந்து 15 வருடங்கள் கழித்து, அவன் மனைவியின் ஊரிலிருந்து சிலர் வந்திருந்தனர். மீண்டும் சேர்த்து வைக்கத்தான் வந்துள்ளனர் என்று நினைத்தவனிடம், அவர்கள் கையில் இருந்த விடுதலைப்பத்திரத்தில் கையெழுத்து மட்டும் கேட்டனர்.

“பாயில் கடந்த பேனாவைத் திறந்து நடுக்கல் கையெழுத்தில் பேரைப் போட்டவன் அவனையும் மீறி நாலைந்து சொட்டுகள் தாளில் விழுந்தன. அதே சமயம் எறவாணத்திலிருந்து சிட்டுக்குருவிகள் பறாச்சென்று வெளியே பறந்தோடிப் போயின” (Kanmani Gunasekaran, 2015).

எறவாணம் என்பது வீட்டில் தாழ்வான உள்கூரை என்ற பொருளில் எடுத்தாளப்பட்டுள்ளது. எறவாணம் மத்துக்கழி வைத்திருப்பதற்கும் பாயைச் சுருட்டி வைப்பதற்கும், துணிகள் தொங்க விடுவதற்கும், சிட்டுக்குருவிகள் கூடு கட்டுவதற்கும் பயன்படுகிறது. இவற்றிலிருந்து மக்கள் பயன்படுத்துகின்ற புழங்கு பொருட்களையும் உணர முடிகிறது.

## மகிட்டி

பொருள்: பெண்கள் குளிக்கும் போது உள் பாவாடையை உயரே ஏற்றி மார்பகங்களை மறைத்துச் செருகிக்கட்டிக் கொள்ளும் உடையணி முறை (மார்புக் கட்டு) (Kanmani Gunasekaran, 2015).

‘வாடாமல்லி’ எனும் சிறுகதையில் சக்கரை மரக்கிளைகளை வெட்டிக் கொண்டிருந்தான். கீழே மல்லிகா குளிப்பதற்காகத் தலையில் தண்ணீர் ஊற்றினாள். “மளமளவெனச் சத்தம். இவளை மறைத்து நின்ற கிளை வெட்டுப்பட்டு வீழவும் ஆவென வெறித்த மரத்தில் கத்தியை விடவும் கூர்மையான அவன் பார்வையில் றெக்கை மட்டும் பிய்க்கப்பட்ட கோழியைப்போல் மகிட்டி கட்டிக்கொண்டு நிற்கும்

இவள், ஒரு கணம் அவளுக்கு என்ன செய்வது என்று தெரியாமல் படல் மேல் கிடந்த அவிழ்த்துப் போட்டிருந்த தாவணியை நொடியில் எடுத்துப் போர்த்திக்கொண்டு அப்படியே விக்கித்துப்போய் நின்று விட்டாள்". மகிட்டி என்ற சொல், பெண்கள் குளிக்கும் பொழுது உடுத்தும் ஆடையாக அமைந்து, நடுநாட்டு வட்டார மக்களின் பண்பாட்டு வாழ்வியலை வெளிக்காட்டுகிறது.

காலமாற்றத்தினால் வழக்குகள் மாறுவதால், அந்தந்த வட்டாரப் பண்பாடும் சிதைவுபடுவதுடன் அடுத்த தலைமுறைக்குப் பண்பாட்டின் கடத்தலும் தடைப்படும். எனவே, வட்டார வழக்குச் சொற்களைச் சிறுகதையில் பயன்படுத்துவதன் மூலம் வட்டார வழக்கு, அடுத்த தலைமுறை மக்களுக்கு எடுத்துச் செல்ல சிறுகதை ஓர் ஊர்தியாக, கருவியாக அமைகிறது.

## மரபுத் தொடர்களும் பழமொழிகளும்

பழங்காலம் தொட்டு, காலம் காலமாக மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் வாய் மொழியான சொற்றொடரே சொலவடைகள் மற்றும் பழமொழிகள். இவை வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபட்டு அமையும். இலக்கியங்களில் பயன்படுத்தும் உவமை நயம் போல, பேச்சுவழக்கில் அமைபவையே சொலவடைகளும் பழமொழிகளும். அத்தகைய சொலவடைகளின் பழமொழிகளின் பொருள் விளக்கத்தை உணர்ந்துகொள்ளும் வகையில் பொருத்தமாகச் சிறுகதையில் பயன்படுத்தி அழிவின் விளிம்பில் உள்ள சொலவடைகளையும் பழமொழிகளையும் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளார் ஆசிரியர்.

## பங்காளிக்குப் பல்லில் விஷம்

பொருள்: பங்காளிகள் நெஞ்சுக்குள் கூட அல்ல, சொல்லிலேயே நம்மைக் கொல்கிற, கெடுக்கிற நஞ்சை வைத்திருப்பர் (Kanmani Gunasekaran, 2015). 'பச்சைக்கிளி' எனும் சிறுகதையில் தம்பியான இளையபெருமாளிடம் சம்மதம் கேட்டு திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள், என்று அண்ணன்மார்களிடம் பெரியப்பா கூறும் சமயத்தில், "பெரியவர்கள் இரண்டு பேருக்கும் திக்கென்று உள்ளுக்குள் இடித்தது. இளையபெருமாள் குறுக்குவசத்தில் தலையாட்ட மாட்டான் எனத் தெரிந்துதான் இதில் இறங்கினார்கள். இருந்தாலும் பங்காளிக்குப் பல்லுல விஷம் என்கிற மாதிரி சிவநாது அவனிடம் எதாவது இக்கு வைத்திருப்பாரோ என்கிற பதற்றம்" (Kanmani Gunasekaran, 2009).

பெற்றோர்களின் சொத்தைப் பங்கு போடுகிறவர்கள் பங்காளி என்று அழைக்கப்படுவர். பங்காளிகள் தங்கள் மனதுக்குள் பொறாமை கொண்டு வாழ்கின்றனர். அவ்வுணர்வு சொற்களாக வெளி வருகிறது. பிறர் மனதைப் புண்படுத்தும் சொற்களைப் பயன்படுத்துவதை இம்முதுமொழி எடுத்துரைக்கிறது.

## பாம்பு படத்தால் அடிப்பது மாதிரி

பொருள்: படமெடுத்த பாம்பு கோபத்தில் வீச் வீச் என்று கொத்துவது போன்று ஒருவரை மனம் புண்படுகிற மாதிரி பேசுதல் (Kanmani Gunasekaran, 2007). 'பச்சைக்கிளி' எனும் சிறுகதையில் வண்டிக்காரன் தன் காதலைப் பச்சையிடம் சொல்லியதை அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை, "தலைகுனிந்து சடசடப்பில் நின்று கொண்டிருந்தவளின் கண்களில் கட்டியிருந்த பாவாடையின் மயில்கள், தோகையை விரித்து ஆட்டம் போட்டன. கையோடு பிரியமாய் வாங்கிக்கொடுத்த கொஞ்சிக்குப்பத்துத் தாய்மாமன் இளையபெருமாள் மனசுக்குள் வந்து சிரித்துக்கொண்டு நின்றான். அவ்வளவுதான் பாம்பு படத்தைப் போட்டுவிட்டுப் போவதைப்போல் அவனை ஏறெடுத்துக் கூடப் பார்க்காமல் சரசரவென பட்டிக்காட்டான் முந்திரிப்பக்கம் போய்க் கொண்டிருந்தாள்" (Kanmani Gunasekaran, 2007).

பாம்பு படத்தால் அடிப்பதுபோல பிறர் மனம் புண்படப் பேசுகின்ற சூழலை எடுத்துரைக்கிறது. இதிலிருந்து சொற்கள் பயன்படுத்துகின்ற முறை, நற்சொற்களைப் பயன்படுத்தி பிறருடன் சுமூகமான முறையில் உறவை மேம்படுத்துவதை உணர்த்துகிறது.

### காட்டுக்காடை வந்து வீட்டுக்காடையை இட்டுக்கொண்டு போனதாம்

பொருள்: வெளியிலிருந்து அல்லது புதிதாக வந்த ஒருவரின் குணநலன்கள் வீட்டில் இருப்போரைப் பாதித்து அவர் போக்குக்குச் செல்லல் (Kanmani Gunasekaran, 2007).

'இரும்புராசி' எனும் சிறுகதையில் கதிர்வேலு டிராக்டர் வாங்குவதற்காக வாங்கிய கடனை அடைக்க முடியாமல், "தன்னிடம் இருந்த காக் காணியையும் தத்தம் பண்ணி சப்சாடாய் கொடுத்துத் தலைமுழுகினான். காட்டுக்காடை வந்து வீட்டுக்காடையை இட்டுக் கொண்டு போனது போல் இருந்த காக்காணியும் போய் காயலாவில் விழுந்தவனாய்க் கிடந்தான்" (Kanmani Gunasekaran, 2009).

காட்டுக்காடை வந்து வீட்டுக்காடையை இட்டுக்கொண்டு போனதாம் என்ற சொலவடையின் மூலம் அன்றாட இயல்பான வாழ்க்கைச் சூழ்நிலையானது புதிய ஒரு முயற்சியினால் பாதிக்கப்படுவதை அறிய முடிகிறது.

நடுநாட்டு வட்டார வழக்கு மரபுத் தொடர்களையும் பழமொழிகளையும் உலக அளவில் கொண்டு சேர்ப்பதுடன், தன் வட்டார எல்லையை விரிவுபடுத்தவும் நடுநாட்டு வட்டார மொழிக்குப் புத்துயிர் அளித்து, பரவச் செய்வதுமே ஆசிரியரின் விருப்பமாக அமைந்துள்ளது.

## முடிவுரை

வட்டார வழக்குச் சொற்கள், அவ்வட்டார மக்களின் பழக்கவழக்கங்களையும் அன்றாட செயல்பாடுகளையும் அவர்களின் வாழ்வியலையும் அறிய உதவும் ஓர் உறைகல்லாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது. மொழி என்பது கருத்துப் பரிமாற்றத்திற்கான கருவியாக மட்டும் அமையாமல், அதைப் பயன்படுத்தும் மக்களின் வாழ்வியல் பொருண்மைகளை உள்ளடக்கிய கருவூலமாக அமைகிறது. மக்களின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் அடையாளம் காண மொழி முன்னிலையில் அமைகிறது. உலகில் தோன்றிய ஆயிரக்கணக்கான மொழிகளுள் இன்றும் செவ்வியல் தன்மையுடன் திகழும் மொழிகளில் ஒன்றான தமிழின், உயிரோட்டமாக வட்டார வழக்கு அமைகிறது.

## References

Kanmani Gunasekaran, (2007) Nadunattu sollagarathi, Tamizhini Pathippagam, Chennai, India.

Kanmani Gunasekaran, (2004) Vellayruku, Tamizhini Pathippagam, Chennai, India.

Kanmani Gunasekaran, (2009) Vadamalli, Tamizhini Pathippagam, Chennai, India.

Kanmani Gunasekaran, (2010) Adhandar kovil Kuthirai, Tamizhini Pathippagam, Chennai, India.

Kanmani Gunasekaran, (2015) Uyir Thanneer, Tamizhini Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License